**கன்னி (கடைசி)ப் பயணம் (கம்பஸ்க்கு)**

**ப. பரமதேவன்**

**விஞ்ஞான பீடம்**

கடந்த ஒரு வாரகாலமாக எனது வீடு பெரும் அமர்க்களமாக இருக்கின்றது. வீட்டிலுள்ள அனைவரிடத்திலும் ஒருவித மகிழ்ச்சி. உறவினர்கள் எங்கள் வீட்டிற்கு வருவதும் சிறு அன்பளிப்புக்களை வழங்குவதும், நான் அவர்களின் ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்வதுமாக நாட்கள் நகருகின்றன. வழமைக்கு மாறாக என்னுடன் சிறுசிறு அன்புச்சண்டையில் ஈடுபடும் எனது சகோதர சகோதரிகள் கூட என்னிடம் ஒருவித மரியாதையுடன் பழகத்தொடங்குகின்றனர். எனது சிறுபராய நண்பர்கள் கூட மரியாதை கலந்த நட்புடன் பழகுகின்றார்கள். எனது அம்மா உற்சாகமாக வீட்டிற்கு வரும் உறவினர்களை உபசரிப்பதும் அவர்களுக்கு வீட்டில் செய்த பலகார வகைகளை வழங்கும்போது என்னைப்பற்றி புகழ்வதும் வாடிக்கையாகிவிட்டது. அப்பா அவருடைய நண்பர்கள் வரும்போது என்னை அழைத்து அவர்களிடம் எனது பெருமைகளை கூறாமல் கூறுவதும் எனக்கு விளங்குகின்றது.

நான் படித்த எனது ஊர் பாடசாலை ஆசிரியர்கள் எனது வீட்டிற்கே வந்து என்னை வாழத்தியதோடு மட்டுமல்லாமல் எனக்கு ஒரு பாராட்டுவிழா ஏற்பாடு செய்திருக்கும் செய்தியினை எனது பெற்றோரிடம் கூறி அவர்களையும் அவ்விழாவிற்கு அழைப்பு விடுத்துச் செல்கின்றனர். ஏற்கனவே எனது புகைப்படம் தாங்கிய திரை எங்கள் பாடசாலை நுழைவாயிலில் தொங்கவிடப்பட்டிருக்கின்றது. இவற்றிற்கு மேலதிகமாக சமூக ஊடகங்களிலும் என்னைப்பற்றிய செய்திகள் வெளிநாடுகள் வரை சென்றிருப்பது எனக்கு சற்று பெருமையாகவே இருக்கின்றது.

கிட்டத்தட்ட அனைத்து ஊடகங்களும் என்னிடம் செவ்வி எடுப்பதற்காக முகவரியே தெரியாத எனது வீட்டிற்கு வந்து சென்றுவிட்டார்கள். என்னுடையது மட்டுமல்லாது எனது குடும்ப உறுப்பினர்கள் அனைவருமுள்ள காணொளிகள் சமூக ஊடகங்களில் தாராளமாக வலம் வந்துகொண்டிருக்கின்றன.

இவ்வளவு சிறப்பிற்கும், எனது வீடு அமர்க்களப்படுவதற்கும் காரணமாக இருந்தது இந்த வருடம் இடம்பெற்ற கல்விப்பொது தராதர உயர்தரப்பரீட்சையில் கணித பாடத்தில் அகில இலங்கை ரீதியில் நான் முதல்நிலை மாணவனாக சித்தியெய்தியதும் அடுத்தவாரம் நான் பல்கலைக்கழகம் செல்ல இருப்பதுமே.

உண்மையிலேயே எனது கிராமத்தைப் பொறுத்த வரையில் இது ஒரு சரித்திரம். என் பாடசாலையிலிருந்து யாரும் இதுவரை பொறியியல் துறைக்கு பல்கலைக்கழகம் சென்றதில்லை. நானே முதன்முதலில் எங்களது ஊரிலிருந்து கணிதத்துறையில் கல்விகற்று பல்கலைக்கழகம் செல்வதனாலும் அதுவும் அகில இலங்கை ரீதியில் முதல் மாணவனாக சித்தி எய்தியிருப்பதனாலும் எனது சாதனையை இந்த ஊரே கொண்டாடிக்கொண்டு இருக்கின்றது. அடிப்படை வசதிகள் எதுவுமே இல்லாத எங்கள் கிராமம், நகரத்திலிருந்து மிகத்தொலைவில் எங்கள் மாவட்டத்தின் ஒரு மூலையில் உள்ளது. நகரத்தையே பார்க்காத எத்தனையோ மக்கள் இங்கு இருக்கிறார்கள். போக்குவரத்து வசதிகள் கூட இல்லை. மின்சார இணைப்பு கூட இன்னும் எங்கள் கிராமத்திற்கு வழங்கப்படவில்லை. ஒரு துவிச்சக்கர வண்டி இருந்தால் அது பெரியதொரு சொத்து, வைத்திருப்பவர்களுக்கு தனி மரியாதை. பிரத்தியேக வகுப்புக்கள் ஏதுமில்லை. பாடசாலைப்படிப்பு மட்டுமே. கணிதத்துறை என்பதனாலோ என்னவோ எனக்கு இவையாவும் ஒரு குறையாகத் தெரியவில்லை. எனக்குத் தேவைப்பட்டவை ஒரு சில பேனாக்களும், உணவு பொதி செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் அச்சிடப்படாத காகிதங்களும் மட்டுமே. பகலில் மர நிழல்களும் இரவில் மண்ணெண்ணை குப்பி விளக்குகளுமே எனக்கு கிடைக்கப்பெற்ற அதியுச்ச வசதிகள்.

அடுத்த வாரம் பல்கலைக்கழகம் செல்வதற்கான அனைத்து ஆயத்தங்களும் ஏற்பாடாகி விட்டன. அம்மாவும் எனது சகோதரிகளும் பலகாரங்கள் மற்றும் இனிப்புகள் செய்து பொதி செய்து விட்டார்கள். எனக்குக் கிடைத்த அன்பளிப்புக்கள், உடுப்புக்கள் அனைத்தும் பைகளில் வைக்கப்பட்டு பிரயாண ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிட்டன. எஞ்சியிருப்பது பல்கலைக்கழகம் செல்வதற்கு பேரூந்து இருக்கையொன்றை முன்கூட்டி பதியும் வேலை மட்டுமே. அப்பாவினது நண்பர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக தங்களது அனுபவங்களை கூறியிருந்தமையால் இவ்வேலை மட்டும் இன்னும் முடியாமல் இழுபறியில் கிடந்து விட்டது. சிலர் நகரத்திற்கு சென்று பின்னர் புகையிரதத்தில் செல்லலாம் என்றும், சிலர் புகையிரதப்பயணம் சிரமம் ஆகையால் பேரூந்திலேயே செல்ல வேண்டும் என்றும், சிலர் முதல் நாளே சென்று பல்கலைக்கழக விடுதியில் தங்கி காலையில் பல்கலைக்கழகம் செல்லலாம் என்றும் வேறுசிலர் பல்கலைக்கழகம் செல்லும் தினத்திற்கு முந்தைய இரவே பயணம் செய்து காலை பல்கலைக்கழகத்திற்கு நேரடியாகச் சென்று தேவையான பணிவிடைகளை முடித்து விட்டு விடுதிக்குச் செல்லலாம் என்றும் பலவாறான கருத்துக்களை கூறியதால் எது

மிகப்பொருத்தமான யோசனை என்று முடிவெடுக்க முடியாமல் காலம் சென்றுவிட்டது. இக்கால இடைவெளிக்குள் என்னுடன் பல்கலைக்கழகம் செல்லவிருந்த எனது மாவட்டத்தை சேர்ந்த மற்றைய மாணவர்கள் முதல் நாள் பல்கலைக்கழக விடுதிக்குச் சென்று அங்கு தங்கி மறுநாள் பல்கலைக்கழகத்தில் ஏற்பாடாகியிருக்கும் புதிய மாணவர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக முடிவெடுத்துவிட்டதாகவும் அறிந்து கொண்டேன்.

பலரது ஆலோசனைகளையும் கருத்திற்கொண்டு ஒருவாறாக முதல்நாள் இரவோடு இரவாக பயணிப்பதாகவும் காலை பல்கலைக்கழகத்தில் இறங்கி பதிவுவேலைகளை முடித்த பின்னர் சக மாணவர்களுடன் சேர்ந்து விடுதிக்குச் செல்வதாகவும் முடிவெடுக்கப்பட்டுவிட்டது. முடிவெடுப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக முன்கூட்டியே இருக்கையைப் பதிவு செய்வது முடியாமற் போய்விட்டது. ஆனால் நேரகாலத்திற்கே வந்தால் இருக்கையொன்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அப்பாவின் நண்பர் கூறிய ஒரு வார்த்தையை நம்பி அன்றைய நாள்கள் செல்வதாக ஒருவாறு முடிவாயிற்று.

பல்கலைக்கழகத்துக்குப் புறப்படவேண்டிய நாளும் வந்துவிட்டது. அந்த இரவிலும் என்னை வழி அனுப்புவதற்கு ஊரே கூடிவிட்டது. எனது அம்மாவின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டு வெளிக்கிடும்போது சரியாக ஒரு கறுத்தப்பூனை நான் செல்ல வேண்டிய வழிக்கு குறுக்காகச் சென்றது. அம்மாவின் கண்களில் ஒருவித பதட்டம். ஆனால் அப்பாவோ ‘‘நேரமாகிறது உடனடியாக வா’’ என்று சொல்லிக்கொண்டு முன்செல்ல நானும் அம்மாவின் கையினைப் பற்றியிருந்த எனது கையை ஒருவாறு விடுவித்துக் கொண்டு அப்பாவை பின் தொடர்கிறேன்.

நகர் சென்று பேரூந்தில் ஏறியாயிற்று. அளவுக்கதிகமான சன நெரிசல் எனது பயணப் பொதிகள், சற்று அதிகமாகவும், கனமாகவும் இருந்தமையினால் அப்பா பாதி நான் மீதியாக சிரமப்பட்டு ஏற்றியாயிற்று. அடுத்த பத்து மணிநேரப் பயணம் நிற்பதுக்குக்கூட இடமில்லாமல் மக்கள் அவதியுறும் நிலையில் எங்கே இருக்கையை எதிர்பார்ப்பது. இருந்த பேரூந்தை விட்டால் நாளை பல்கலைக்கழகத்தில் நிற்பதற்கு வேறெந்த வழியுமில்லாமல் போய்விடும். ஆகவே நின்று கொண்டாவது பயணம் செய்வதில் என உறுதியாகவிருந்தோம். எங்களைப் போலவே இன்னும் சிலர் பெரிய பயணப்பொதிகளுடன் ஏற சிரமப்பட்டுக் கொண்டிருக்கையில் ஏற்கனவே இருக்கையில் இடம்பிடித்தவர்கள் தங்களுக்கு அவர்கள் வசதியீனத்தை ஏற்பத்துவதாகச் சொல்லி புறுபுறுத்துக் கொண்டிருந்தனர்.

முதல் நாள் வெள்ளைச் சட்டைதான் அணிந்துவர வேண்டும் என்று ஏற்கனவே சிரேஷ்ட மாணவர்கள் கூறியிருந்தமையால் பயணத்தின் போதே நான் வெள்ளைச்சட்டை அணிந்தே வெளிக்கிட்டிருந்தேன். எமது நாட்டை பொறுத்த வரையில் எந்த பேரூந்து பயணத்திற்கும் வெள்ளைச்சட்டை பொருத்தமற்றதாக இருந்த போதிலும் சிரேஷ்ட மாணவர்களின் கட்டளையை மீறாமலிருக்கவும், எனது சகமாணவர்களுள் நான் மாறுபாடான ஒருவனாக காட்டிக்கொள்ள விரும்பாததாலும் வெள்ளைச் சட்டையையே அணிந்திருந்தேன். ஆனால் நேரம் செல்லச் செல்ல அது அழுக்குகளை உள்வாங்கிக் கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் இருக்கை ஒன்றிற்கு மேலிருந்த பொதியொன்று என்னில் விழுந்து அதிலிருந்த உணவுப் பொருளொன்றின் எண்ணெய் கறைகூட எனது சட்டையில் பரவிவிட்டது. மொத்தத்தில் வெள்ளைச்சட்டை அழுக்குச்சட்டையாக மாறிவிட்டது. சட்டை மாற்றுவதற்கு கூட வசதியோ அவகாசமோ இருக்கவில்லை.

காலை மணி எட்டு. வழமையிலும் பார்க்க சற்றுத் தாமதித்து வந்தது அந்தப் பேரூந்து. பல்கலைக்கழகம் வந்துவிட்டதாகவும், இறங்கும்படியும் நடத்துனர் சத்தமிட்டார். கூட்டம் அதிகமாக இருந்தமையியால் மிகவும் சிரமத்துடன் இருவரும் மக்கள் கூட்டத்தைப் பிளந்து கொண்டு பொதிகளையும் சுமந்துகொண்டு இறங்கினோம். பல்கலைக்கழக வாயிலில் புதுமுக மாணவர்களை வரவேற்க, வரவேற்பு பதாதைகள் தொங்கவிடப்பட்டிருக்கின்றன. அவற்றை பார்த்தவாறே இறங்கி வலது காலை நிலத்தில் வைத்தபோது வெள்ளைச்சட்டை அணிந்த இரண்டு மூன்று மாணவர்கள் எங்களைத் தாண்டி ஓடுகின்றனர். அவர்களைத் துரத்தி இன்னும் சில மாணவர்கள் ஓடுகின்றனர். எனக்கு நிலைமை ஓரளவு புரிந்துவிட்டது. பகிடிவதையின் ஒரு அங்கமாகத்தான் இது இருக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டு பல்கலைக்கழக வாயிலினூடாக பல்கலைக்கழகத்தினுள் நுழையும்போது ஏற்கனவே நான் கண்ட அந்த மாணவர்களும் ஓடிவந்து என்னுடன் சேர்ந்து கொண்டனர். அவர்கள் வேர்த்து விருவிருத்து களைத்துப்போய் மூச்சு வாங்கிக்கொண்டு இருந்தனர். தாங்களும் புதுமுக மாணவர்களாம். நேற்று இரவே விடுதியில் வந்து தங்கிவிட்டார்களாம். ஆனால் விடுதியில் சிரேஷ்ட மாணவர்கள் பகிடிவதை என்ற போர்வையில் தங்களை தூங்கவிடவே இல்லையாம். வெள்ளைச் சேட்டு அணிந்துவர வேண்டும் என்று கண்டிப்பாக கூறினார்களாம் என்று கூறி மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கிக்கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய சட்டையும் என்னுடையது போன்றே மிகக் கேவலமாக இருப்பதை பார்க்கிறேன். கதைத்துக் கொண்டே சென்று மாணவர்களை பதிவு செய்யும் இடத்திற்கு வந்துவிட்டோம்.

ஏற்கனவே நிகழ்நிலையில் பதிவுசெய்தமையினால் மூலப்பிரதிகளை மட்டும் சமர்ப்பித்து எனது பதிவினை எளிதாக மேற்கொண்டு விட்டேன். ஆனால் பதிவு செய்வதற்கு அமர்த்தப்பட்ட ஊழியர்கள் நான் பகிடிவதைக்கு உட்பட்டிருப்பதாகச் சந்தேகித்து என்னையும் என்னுடன் வந்த இருவரையும் ஓரத்தில் நிற்குமாறு பணித்து யாருக்கோ தொலைபேசி அழைப்பினை மேற்கொண்டு எங்கள் விபரங்களைத் தெரிவிக்கின்றனர். என்னையும் என்னுடன் வந்த மற்றைய இருவரையும் ஒரு ஓரத்தில் நிற்குமாறு பணித்துவிட்டு யாரருக்கோ தொலைபேசி அழைப்பினை மேற்கொண்டனர். சற்று நேரத்தில் இரு உயர் அதிகாரிகள் அந்த இடத்திற்கு வந்து எங்களை விசாரணை மேற்கொள்கின்றனர். எங்கள் மூவரதும் உடை அழுக்காக இருப்பதாகவும் நாங்கள் பகிடிவதைக்கு உட்பட்டிருப்பதாகவும் எங்களை பகிடிவதை செய்த சிரேஷ்ட மாணவர்கள் யாரென்று கூறுமாறும் கேட்கின்றனர். புரியாத மொழி. நானோ திகைத்துப்போய் நிற்கின்றேன். என்ன சொல்வதென்று தெரியாமல் விறைத்துப்போய் நிற்கும் போது, எவ்வளவு விசாரித்தும் நீங்கள் இதுவரை யாரவர்கள் என்று எங்களிடம் கூறாமல் இருப்பதனால் பல்கலைக்கழக சட்டப்படி பகிடி வதைக்கு உடந்தையாக இருந்ததன் காரணமாக உங்களை குறைந்தது இரண்டு வாரங்களிற்காகவாவது பல்கலைக்கழக எல்லைக்குள்ளேயே வரமுடியாதவாறு தீர்மானம் மேற்கொள்கின்றோம் என்று கூறி அவர்கள் தயாரித்து கொண்டு வந்திருந்த அதற்கான கடிதத்தை தந்தனர். நேற்று இரவு பல்கலைக்கழக விடுதியில் நடந்த பகிடிவதை சம்பவத்தினால் நிர்வாகமே ஆடிப்போயுள்ளதாகவும் கனிஷ்ட மாணவர்கள் யாரும் பகிடிவதை செய்த சிரேஷ்ட மாணவர்களை அடையாளம் காண்பதற்கு உதவமுன்வரவில்லை என்பதனாலும் கனிஷ்ட மாணவர்களிற்கும் சேர்த்து தண்டணை வழங்கினால்தான் இந்த பகிடிவதைச் சம்பவத்தை குறைக்கமுடியும் எனவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தங்களுக்குள் பேசிக்டிகாண்டனர். அதற்கமையவே இக்கடிதத்தை வழங்கிவிட்டுச் செல்கின்றனர். அப்போது பயணத்தின் ஆரம்பத்தில் கறுத்த பூனையின் செயலையும் எனது தாயின் முத்தில் தெரிந்த கலக்கத்தையும் மனதில் நினைத்தவனாக ஒரு கையில் மாணவனாகப் பதிவு செய்த படிவத்தையும் மறுகையில் out of bounds கடிதத்தையும் சுமந்து கொண்டு பல்கலைக்கழக வாயிலில் நிற்கும் எனது தந்தையைத் தேடிச் செல்கின்றேன்.

***யாவும் கற்பனையே***